## மடுள்ள பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

மடுள்ள பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று , அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணினி நிலையம் ஒன்றிற்காக நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 67,800 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதனத்தின் ஈடுபாட்டிற்கு மானியத்தின் மூலம் பங்களிப்பு அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரியாக இனங் காணப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2021 ஒக்டோபர் 22 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 7,596,000 பெறுமதியான 80 நடமாடும் வியாபாரக் கூடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் மூலம் பங்களிப்பு அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரியாக இனங் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மகுல்ல வாரச்சந்தை இடத்தை மேம்படுத்தும் முடிவு வேலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 8,832,282 ஆக இருந்த போதும் அப்பெறுமதி ரூபா 4,293,497 என காண்பிக்கப்பட்டமையால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 4,538,785 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபை மூலம் மின்சார இணைப்பு பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 150,500 ஆன தொகை மூலதனச் செலவின கணக்கிற்கு இரண்டு முறை பதிவு செய்யப்பட்டதால் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறான செலவினத்தை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் குறிதத் செலவினத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது, | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 463,667 ஆன செலவினம் மீளாய்வாண்டின் கடன் கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்படா மையால் கடன் கொடுத்தோர் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்தும் மிகை அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்குரிய செலவினம் 2021 ஆம் ஆண்டின் கடன் கொடுத்தோராக ஒதுக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எஞ்சிய அடுத்த ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 1,474,303 ஆன முத்திரைக் கட்டண பெறுமதி நீதிமன்றத் தண்டப்பண பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சரியாக கணக்கு வைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | சபையால் பின்பற்றப்பட்டிருந்த நடைமுறை வேலைகளை இனங்காணும் கொள்கை மற்றும் வருமானங்களை இனங்காணும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டில் கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப் பட வேண்டும். |

### 1.6.2. அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை சபையினால் அறவிடப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணங்களிலிருந்து 50 சதவீதம் வரும் வகையில் ரூபா 108,250 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் குறித்த வெளிக்கள பரிசோதனைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அத்தொகை தவறுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு படிகள் செலுத்தப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,778,709 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,371,669 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 02 மோட்டர் கிரேடர்கள், பெக்கோ லோடர் இயந்திரமொன்றும் டிபர் இயந்திரம் ஒன்று என்பவற்றை வாடகைக்கு வழங்கும் போது போதியளவு முற்பணம் பெற்றுக்கொள்ளாமையால் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய 1,229,100 ஆன வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை இயந்திர வாடகை அறவிட வேண்டும். |